1973 நவம்பர் 20]

திரு. எஸ். வடிவேல் : கல்லூரிப் பாட நூல்களெல்லாம் தமிழில் கொண்டுவரும் வேலை இன்னும் எவ்வளவு நாளில் பூர்த்தியாகும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எவ்வளவு நாள் என்று வரையறுத்துச் சொல்ல முடியாது. ஆனால், இப்பொழுது 483 கல்லூரிப் பாட நூல்கள், பி.ஏ., பி.எஸ்ஸி., புகுமுக வகுப்பு ஆகியவற்றுக்காக வெளியிடப்பட்டிருக்கின்றன. இன்னும் 417 நூல்கள் வெளியிடுவதற்கான முயற்சிகள் பல்வேறு கட்டங்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆண்டுக்காண்டு அது விரிவுபடுத்தப்படும். பொருளாதாரம், அரசியல், வரலாறு ஆகிய சில பிரிவுகளுக்கு மேல் பட்டப் படிப்பைப் பொறுத்த வரையில் எம்.ஏ. வகுப்புக்குப் பாட நூல்கள் தமிழில் வெளியிடுவதற்கான முயற்சியினைத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் மேற்கொண்டிருக்கிறது.

நூல்கள் வாங்க நிதியுதவி

***202 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு கல்வி சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புகுமுக வகுப்பில் தமிழைப் பயிற்சி மொழியாக ஏற்றுப் படிக்கும் மாணவர்களுக்கு நூல்கள் வாங்க வழங்கப்படும் தொகையை உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை. தமிழ் நூல்களை வாங்க இப்பொழுது தரப்படும் தொகையான ரூ. 50 போதுமானது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இப்படி நூல்கள் வாங்குவதற்கு அளிக்கப்படும் தொகை எந்தத் தேதியிலே இருந்து அளிக்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழில் பாடம் எடுத்துப் படிக்கும் மாணவர் ஒவ்வொருவருக்கும் பி.ஏ., பி.எஸ்ஸி. வகுப்பிற்கு—ஆண்டொன்றுக்கு ரூ. 180 வீதம் மூன்று ஆண்டுகளுக்குத் தரப்படுகிறது. புகுமுக வகுப்பில்

ஏற்கெனவே சம்பளச் சலுகை இருந்து வருவதன் காரணமாக புத்தகம் வாங்க ரூ. 50 தரப்படுகிறது. சென்ற இரண்டு ஆண்டுக் காலமாக இந்த உதவி அளித்து வரப்படுகிறது.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழைப் பயிற்சி மொழியாக எடுத்துப் படிக்கும் மாணவர்கள் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு அதிகரிக்கிறதா? குறைகிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஓரளவு ஆண்டுக்காண்டு அதிகரித்து வருகிறது. 1969-70-ம் ஆண்டில் 19 ஆயிரம் சில்லறை மாணவர்கள் தமிழைப் பாட மொழியாக எடுத்துப் பயின்றார்கள். 1970-71-ம் ஆண்டில் இருபதாயிரம் சில்லறை மாணவர்கள் பயின்றார்கள். 1971-72-ம் ஆண்டில் இருபத்தொரு ஆயிரம் சில்லறை மாணவர்கள் தமிழைப் பாட மொழியாக எடுத்துப் பயின்றிருக்கிறார்கள். ஆக, ஆண்டுக்காண்டு இதனுடைய எண்ணிக்கை பெருகி வருகிறது.

Institute of Epigraphy

* 203 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to set up an Institute of Epigraphy in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) ஆம்.

பண்டைய எழுத்துக்களையும், கல்வெட்டுகளில் உள்ள எழுத்துக்களையும் படிப்பதற்கும், அவற்றின் அடிப்படையிலே வரலாற்றை அறிவதற்கும் மாணவர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கக் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் ஒன்றை இம்மாநிலத்தில் தொல்பொருள் ஆய்வுத் துறையின்கீழ் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது.

Thiru N. DENNIS : May I know, Sir, whether any trainee is taken in this State?